# தி.மு.க. தலைமையிலான கூட்டணிக் கட்சிகளுக்கு தொகுதிப் பங்கீடு!

## சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

நடைபெற உள்ள 2026 சட்டமன்ற பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி பேச்சுவார்த்தைக்குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அவர்களும் – தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு.கு.செல்வப்பெருந்தகை அவர்களும் இன்று (28–03–2026) தொகுதி உடன்பாடுகள் குறித்து கலந்து பேசியதில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இடம் பெற்றுள்ள காங்கிரஸ் கட்சி, தமிழ்நாட்டில் கீழே குறிப்பிட்டுள்ள 28 (இருபத்தெட்டு) சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிடுவதென முடிவு செய்யப்பட்டது.

**தொகுதிகளின் விவரம்**

1. **பொன்னேரி (தனி)**
2. **திருபெரும்புதூர் (தனி)**
3. **சோளிங்கர்**
4. **உதகமண்டலம்**
5. **ஈரோடு கிழக்கு**
6. **அறந்தாங்கி**
7. **கடலூர்**
8. **மயிலாடுதுறை**
9. **காரைக்குடி**
10. **சிவகாசி**
11. **திருவாடனை**
12. **திருவைகுண்டம்**
13. **நாங்குநேரி**
14. **குளச்சல்**
15. **விளவங்கோடு**
16. **கிள்ளியூர்**
17. **வேளச்சேரி**
18. **ஊத்தங்கரை (தனி)**
19. **துறையூர் (தனி)**
20. **கவுண்டம்பாளையம்**
21. **ஆத்தூர் (தனி)**
22. **பென்னாகரம்**
23. **சிங்காநல்லூர்**
24. **அம்பாசமுத்திரம்**
25. **கிருஷ்ணகிரி**
26. **உசிலம்பட்டி**
27. **சங்கரன்கோவில்**
28. **மேலூர்**

(கு.செல்வப்பெருந்தகை)
தலைவர்,
தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி

(டி.ஆர்.பாலு)
கூட்டணி பேச்சுவார்த்தைக்குழுத் தலைவர்,
தி.மு.க.

## சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

நடைபெற உள்ள 2026 சட்டமன்ற பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி பேச்சுவார்த்தைக்குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அவர்களும் – இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)–ன் தமிழ்நாடு மாநிலக் குழுச் செயலாளர் திரு.பெ.சண்முகம் அவர்களும் இன்று (28–03–2026) போட்டியிடும் தொகுதிகள் குறித்து கலந்து பேசியதில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இடம் பெற்றுள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தமிழ்நாட்டில் கீழே குறிப்பிட்டுள்ள **ஐந்து** தொகுதிகளில் போட்டியிடுவதென முடிவு செய்யப்பட்டது.

**தொகுதிகளின் விவரம்**

1. **கீழ்வேளூர் (தனி)**
2. **கந்தர்வக்கோட்டை (தனி)**
3. **பத்மநாபபுரம்**
4. **பழனி**
5. **திருவொற்றியூர்**

(பெ.சண்முகம்)
செயலாளர்,
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)

(டி.ஆர்.பாலு)
கூட்டணி பேச்சுவார்த்தைக்குழுத் தலைவர்,
தி.மு.க.

## சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

நடைபெற உள்ள 2026 சட்டமன்ற பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி பேச்சுவார்த்தைக்குழு தலைவர் டி.ஆர்.பாலு அவர்களும் – மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக அவைத்தலைவர் ஆடிட்டர் ஆ.அர்ஜுனராஜ் அவர்களும் இன்று (26–03–2026) போட்டியிடும் தொகுதிகள் குறித்து கலந்து பேசியதில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இடம் பெற்றுள்ள மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டில்

1. **மதுரை தெற்கு**
2. **மொடக்குறிச்சி**
3. **கடையநல்லூர்** ஆகிய **மூன்று** தொகுதிகளில் உதயசூரியன் சின்னத்திலும்;

**மற்றும்**

**4. சீர்காழி (தனி)** தொகுதியில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒதுக்கப்படும் சின்னத்திலும் போட்டியிடுவதென முடிவு செய்யப்பட்டது

(ஆடிட்டர் ஆ.அர்ஜுனராஜ்)
அவைத்தலைவர்,
மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்

(டி.ஆர்.பாலு)
கூட்டணி பேச்சுவார்த்தைக்குழு தலைவர்
தி.மு.க.

### விஜய் கூட்டத்திற்கு அனுமதி மறுப்பு விவகாரம் - அரசுக்கு சம்பந்தம் இல்லை!

# தேர்தல் ஆணையமே அரசியல் கட்சிகளின் நிகழ்ச்சிக்கு அனுமதி வழங்குகிறது!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!

சென்னை, மார்ச் 29 –

தேர்தல் நடத்தை விதி முறைகள் அமலுக்கு வந்த பிறகு, அரசியல் கட்சிகளின் கூட்டத்திற்கு தேர்தல் ஆணையம் தான் அனுமதி அளிக்கும் என்பதால், பெரம்பூரில் விஜய்யின் தேர்தல் பிரச்சாரத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டதற்கும், அரசிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.



சென்னை சைதாப்பேட்டை பஜார் சாலையில் உள்ள சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், அ.தி.மு.க.வை சேர்ந்தவர்கள் தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி நடைபெற்றது. சோழிங்கநல்லூர் தொகுதியை சேர்ந்த அ.தி.மு.க. இளைஞரணி நிர்வாகிகள் 300 பேர் சென்னை தெற்கு மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான மா.சுப்பிரமணியன் முன்னிலையில் தங்களை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், பகுதி செயலாளர்கள் ரவிச்சந்திரன், மதியழகன், வட்டச் செயலாளர் ஏகாம்பரம், அவைத் தலைவர் குணசேகரன் உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் மா. சுப்பிரமணியன், பெரம்பூரில் விஜய் கூட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டதற்கும், அரசுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும், அரசியல் கட்சிகளின் நிகழ்ச்சிகளுக்கு ஆன்லைனில் விண்ணப்பித்தால் தேர்தல் ஆணையம் அனுமதி வழங்கி வருவதாகவும் விளக்கமளித்தார்.

### வணிகர் நலன் காக்கும்

# தி.மு.கழகக் கூட்டணியை ஆதரிப்பீர்!

## வணிகர் நல வாரிய நிர்வாகக் குழு உறுப்பினர் சேப்பாக்கம் வி.பி.மணி வேண்டுகோள்!

சென்னை, மார்ச். 29–

வணிகர் நலன் காக்கும் தி.மு.கழகம் தலைமையிலான கூட்டணியை ஆதரிப்பீர் என்று வணிகர் நல வாரிய நிர்வா கக் குழு உறுப்பினர் சேப்பாக்கம் வி.பி.மணி வணிகர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

தமிழக ”வணிகர்களின் பாதுகாவலர் தலைவர் கலைஞர் அவர்களின் அன்றைய பொற்கால ஆட்சியில் வணிகர்களுக்கு பல்வேறு வரிச் சலுகை களையும், நலத்திட்டங்களையும் வாரி வழங்கி, பெருமளவில் வரிச் சீரமைப்பு செய்ததும் நமது தி.மு.கழக அரசு.

பலமுனை வரியை ஒரு முனை வரியாக்கி, வணிகர்களின் வாழ்வாதாரத்தை பெரிதும் பாதுகாத்ததும் தி.மு.கழக அரசு மாவட்ட எல்லை களில் வணிகவரி அதிகாரிகள் வணிகர்களை மிரட்டி லஞ்சம் பெற பெரிதும் துணை நின்ற பல்வேறு சோதனைச் சாவடிகளை அறவே நீக்கியதும் நமது தி.மு.கழக அரசு.

இந்தியாவிலேயே முதன்முறை யாக 1989 ல் தமிழ்நாட்டில் வணிகர் நல வாரியம் அமைத்ததும் தி. மு.கழக அரசு.

வணிகர் நல வாரியத்தில் தமிழக வணிகப் பிரதிநிதிகளை நிர்வாகக் குழு உறுப்பினர்களாக நியமித்து, அழகு பார்த்ததும் நமது தி.மு.கழக அரசு.

அன்றைய அ.தி.மு.க ஆட்சியில் 3 நாள் தொடர் கடையடைப்பு செய்தும், வெள்ளைக்கொடி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்தியும் திரும்பப் பெறாத புதிய தொழில் வரியை, பல்வேறு வகைகளாக மாற்றி மிகவும் எளிமையாக்கி, வணிகர்கள் விரும்பும் வகையில் சீரமைத்ததும் தி.மு.கழக அரசு.

பொதுமக்கள் தினசரி பயன்படுத்தும் பலவகையான அத்தியாவசிய பொருட்களுக்கு முழு வரி விலக்கு அளித்ததும் நமது தி.மு.கழக அரசு.

வணிகர்களுக்கு இடையூறாக இருந்த கூடுதல் விற்பனை வரியை முழுமையாக ரத்து செய்ததும் நமது தி.மு. கழக அரசு. நமது ”தாய் உள்ளம் கொண்ட முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் இன்றைய பொற்கால ஆட்சியில் முந்தைய அ.தி.மு.க ஆட்சியில் முற்றிலும் முடக்கப்பட்ட வணிகர் நல வாரியத்தை மீண்டும் சீரமைத்து, 20 நிர்வாகக் குழு உறுப்பினர்களை 30 நிர்வாகக் குழு உறுப்பினர்களாக உயர்த்தியதும் நமது தி.மு.கழக அரசு. வணிகர் நல வாரிய ஆயுள் உறுப்பினர் சேர்க்கை பதிவுக் கட்டணம் 500 ரூபாயை 3 அரசாணைகள் மூலம் 10 மாதங்களுக்கு விலக்கு அளித்து, பல்லாயிரக்கணக்கான எளிய வணிகர்களை தொடர்ந்து பாதுகாத்ததும் நமது தி.மு.கழக அரசு.

வணிகர் நல வாரியத்தில் குடும்ப நல நிதி உதவித் தொகையை முதலில் 1 லட்சத்தில் இருந்து 3 லட்சமாக உயர்த்தியும், தற்பொழுது மீண்டும் 5 லட்சமாக உயர்த்தி, ஏழை எளிய நடுத்தர வணிக குடும்பங்களை தொடர்ந்து பாதுகாத்தது வருவதும்... நமது தி.மு.கழக அரசு

தற்பொழுது எரிவாயு தட்டுப்பாடு காரணமாக மின்சார அடுப்பு பயன்படுத்தும் ஹோட்டல்களுக்கு அவர்கள், தற்பொழுது கூடுதலாக செலுத்தும் மின் கட்டணத்தில் யூனிட்டுக்கு 2 ரூபாய் கட்டணச் சலுகை வழங்கியும், மேலும் புதிய மின் அடுப்பு வாங்க கூடுதலாக மானியமும் வழங்கியதும் நமது தி.மு.கழக அரசு

இதைப் போன்ற எண்ணிலடங்கா வரிச்சலுகைகளையும், நலத்திட்டங்களையும் தொடர்ந்து கழக அரசிடம் பெற்று வரும் ”நாம் நன்கு எடை போட்டு, நமது தொழில் வணிகத்தை தொடர்ந்து பாதுகாக்க, முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பொற்கால ஆட்சி தமிழ்நாட்டில் மீண்டும் மலர வணிகர்களே.! நன்றி மறவாமல் உதயசூரியன் சின்னத்தில் நாம் குடும்பத்துடன் வாக்களிப்போம்.!!!

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



**டெல்லி பாசிஸ பா.ஜ.க. ஆட்சிக்கு, தமிழ்நாடு எப்போதும் OUT OF CONTROL தான்!**